




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 276 30.03.2026 MONDAY PANGUNI: 16 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 276 30.03.2026 திங்கள்கிழமை பங்குனி : 16 விலை : ரூ.5/-


## “மேற்காசிய மோதலால் ஏற்பட்டுள்ள

# “சவால்களை அரசியலாக்க வேண்டாம்!”

## பிரதமர் மோடி



புதுடெல்லி: மார்ச்.30-

மேற்காசிய மோதலால் ஏற்பட்டுள்ள சவால்களை அரசியலாக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளை பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று நடைபெற்ற மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்த மார்ச் மாதம் உலகளவில் மிகவும் கொந்தளிப்பாக உள்ளது. கோவிட் காரணமாக உலகம் நீண்டகாலமாக பல பிரச்சினைகளைச் சந்தித்தது நம் அனைவருக்கும் நினைவிருக்கிறது. கரோனா நெருக்கடியைக் கடந்த பிறகு, உலகம் ஒரு புதிய முன்னேற்றப் பாதையில் செல்லும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்தோம்.

ஆனால், உலகின் பல்வேறு பகுதிகளில் போர் மற்றும் மோதல் சூழ்நிலைகள் தொடர்ந்து உருவாகி வருகின்றன. தற்போது நமது அண்டை நாடுகளில் ஒரு மாதமாக ஒரு கடுமையான போர் நடந்து கொண்டிருக்கிறது. நமது குடும்ப உறுப்பினர்களில் லட்சக்கணக்கானோர் இந்த வளைகுடா நாடுகளில் வசிக்கின்றனர். குறிப்பாக வளைகுடா நாடுகளில் பணிபுரிகின்றனர். அங்குள்ள ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு அனைத்து விமாத உதவிகளையும் வழங்கி வரும் வளைகுடா நாடுகளுக்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது போர் நடந்து கொண்டிருக்கும் பிராந்தியம், நமது எரிசக்தி தேவைகளுக்கான ஒரு முக்கிய மையமாகும். இது பெட்ரோல், டீசல் தொடர்பாக ஒரு சர்வதேச நெருக்கடியை உருவாக்கி வருகிறது. நமது சர்வதேச உறவுகள், பல்வேறு நாடுகளிடம் இருந்து நாம் பெரும் ஆதரவு, கடந்த பத்தாண்டுகளில் நமது தேசம் கட்டமைத்துள்ள வலிமை ஆகியவை இந்த சவால்களை இந்தியா துணிச்சலுடன் எதிர்கொள்ள உதவியுள்ளது.

நிச்சயமாக இது ஒரு சவாலான காலகட்டம். இன்று மனதின் குரல் மூலம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை வெல்ல வேண்டும் என்று நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த விஷயத்தை அரசியல்மயமாக்குபவர்கள், அவ்வாறு செய்வதைத் தவிர்க்க வேண்டும். இது 140 கோடி குடிமக்களின் ;நலன்கள் தொடர்பான ஒரு விஷயம். இதில் சுயநல அரசியலுக்கு இடமில்லை.

எனவே, வதந்திகளைப் பரப்புபவர்கள், நாட்டுக்கு பெரும் தீங்கை விளைவிக்கின்றனர். நமது நாட்டு மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறும், வதந்திகளால் தவறாக வழிநடத்தப்படாமல் இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன். அரசாங்கம் வழங்கும் தொடர்ச்சியான தகவல்களை நம்பி அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுங்கள். எப்பொழுதும்போலவே, நமது 140 கோடி மக்களின் வலிமையால் கடந்த கால நெருக்கடிகளை நாம் கடந்து வந்ததைப் போல இம்முறையும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெற்றி பெறுவோம் என்று நான் உறுதியா நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## தேர்தல் பிரச்சாரத்தை மார்ச் 31ல் திருவாரூரில் தொடங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை: மார்ச்.30-

தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், வரும் 31ம் தேதி மாலை 5 மணிக்கு திருவாரூரில் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார். திமுக தலைமைக் கழகம் இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மு.க. ஸ்டாலின் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்க உள்ளார்.

இதற்கான தொடர் பிரச்சாரத்தை மார்ச் 31ம் தேதி திருவாரூரில் தொடங்க உள்ளார். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மு.க. ஸ்டாலின், முதற்கட்டமாக திமுக முன்னாள் தலைவர் கருணாநிதியின் ஊரான திருவாரூரில் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

திருவாரூர் தெற்கு ரத வீதியில் மாலை 5 மணிக்கு இந்த பிரச்சார பொதுக்கூட்டம் தொடங்கும். திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வேட்பாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

இதனைத் தொடர்ந்து ஏப். 1ம் தேதி காலை 9 மணிக்கு திருச்சி உழவர் சந்தையில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் ஆகிய தொகுதிகளின் சட்டமன்ற வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கரூர் பொதுக்கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளின் வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

ஏப். 2ம் தேதி காலை 9 மணிக்கு ஈரோட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், மாலை 5 மணிக்கு கோவை பொதுக்கூட்டத்திலும் மு.க. ஸ்டாலின் உரை நிகழ்த்த உள்ளார்.



## சிபிஐ வேட்பாளர் பட்டியல் வெளியீடு தளி தொகுதியில் மீண்டும் ராமச்சந்திரன்

சென்னை: மார்ச்.30-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் 5 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை அறிவித்து வருகின்றன. இந்த வரிசையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் ஐந்து தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பட்டியல்:

1.தளி டி.ராமச்சந்திரன்

2.திருத்துறைப்பூண்டி (தனி) மாரிமுத்து

3.திருவில்லிபுத்தூர் (தனி) பி.மகாலிங்கம்

4.திருப்பூர் வடக்கு ரவி

5.பவானிசாகர் (தனி) பி.எல்.சுந்தரம்

இவர்களில் தளி தொகுதியில் போட்டியிடும் ராமச்சந்திரன் மற்றும் திருத்துறைப்பூண்டியில் போட்டியிடும் மாரிமுத்து ஆகியோர் 2021 தேர்தலில் சிபிஐ சார்பில் வெற்றி பெற்றவர்கள். தற்போது மக்கள் பிரதிநிதிகளாக உள்ள அவர்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கி உள்ளது சிபிஐ. ரவி, பி.எல்.சுந்தரம் ஆகியோர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு இருந்தனர். அவர்களுக்கும் அக்கட்சி மீண்டும் வாய்ப்பு வழங்கி உள்ளது.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## அதிமுகவில் இருந்து வந்தவர்களுக்கே திமுகவில் அதிக சீட் 19 பேருக்கு வாய்ப்பு!



மதுரை: மார்ச்.30-

அதிமுகவில் இருந்து தாவியவர்களுக்கு திமுகவில் அதிக முக்கியத்துவம் கொடுத்து வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழகத்தில் இரு பெரும் மாநில கட்சிகளாக திமுக, அதிமுக உள்ளன. அந்த வகையில், சில கருத்துவேறுபாடு காரணமாக அதிமுகவில் இருந்து விலகியவர்களும், நீக்கப்பட்ட சிலரும் திமுகவில் இணைந்துள்ளனர். ஏற்கெனவே திமுகவில் உள்ளவர்களை பின்னுக்கு தள்ளி, அதிமுகவினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக திமுகவுக்குள் குற்றச்சாட்டு உள்ளது.

இதனை நிரூபிக்கும் வகையில் கடந்தமுறை திமுக அமைச்சரவையில் செந்தில்பாலாஜி, முத்துச்சாமி, ரகுபதி, எ.வ.வேலு போன்றவர்களுக்கு முக்கிய துறைகள் ஒதுக்கப்பட்டு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

2026 சட்டப்பேரவை தேர்தலிலும் அதிமுகவில் இருந்து திமுகவுக்கு தாவியவர்களுக்கே அதிக சீட்டுகள் ஒதுக்கீடு செய்திருப்பது தெரிகிறது. அக்கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கிய (28) எண்ணிக்கைக்கு அடுத்த நிலையில், அதிமுகவில் இருந்து சமீபத்தில் திமுகவுக்கு சென்ற ஓபிஎஸ், வைத்தியலிங்கம், மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட 19 பேருக்கு தேர்தலில் சீட் வழங்கி அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, தேனி மாவட்டம் போடி தொகுதி ஓ. பன்னீர்செல்வம், ஒரத்தநாடு வைத்திலிங்கம் , ஆலங்குளம் மனோஜ் பாண்டியன், விளாத்திக்குளம் மார்க்கண்டேயன், சென்னை துறைமுகம் சேகர்பாபு, ஈரோடு மேற்கு முத்துசாமி, நாகர்கோவில் ஆஸ்டின், திருமங்கலம் மணிமாறன் (சேடப்பட்டி முத்தையா மகன்), முதுகுளத்தூர் ராஜகண்ணப்பன், அருப்புக்கோட்டை சாத்தூர் ராமச்சந்திரன் , திருவண்ணாமலை எ வ வேலு, கோவை தெற்கு செந்தில்பாலாஜி,

திருச்செந்தூர் அனிதா ராதாகிருஷ்ணன், திருமயம் ரகுபதி, பெருந்துறை தோப்பு என்.டி. வெங்கடாசலம் , விழுப்புரம் லட்சுமணன், பாப்பிரெட்டிப்பட்டி பழனியப்பன், ஆம்பூர் வில்வநாதன், ஒசூர் சத்யா ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சசிகலாவுக்கு நடிகர் கார்த்திக் ஆதரவு



**புதிய கட்சி தொடங்கியிருக்கும் சசிகலாவை சந்தித்த நடிகர் கார்த்திக், சட்டப்பேரவைத் தேர்தலில் தனது ஆதரவை தெரிவித்தார்.**

**பாமக நிறுவனர் ராமதாஸ், 'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் என்ற புதிய கட்சியைத் தொடங்கியிருக்கும் சசிகலா ஆகியோர் கூட்டணி அமைத்து சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ளனர். இந்நிலையில் போயஸ் கார்டன் இல்லத்தில் சசிகலாவை நடிகர் கார்த்திக் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.**

**அனைத்திந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் தமிழக தலைவராக இருந்த கார்த்திக், தற்போது மனித உரிமை காக்கும் கட்சி என்ற கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார். இந்நிலையில் சசிகலாவுடனான சந்திப்பின்போது, சட்டப்பேரவை தேர்தலில் சசிகலா ராமதாஸ் கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளார்.**





"டிக்கெட் புக்கிங்கில் சாதனை.. பரிசாகத் தங்கக் காசுகள்!"

# திசையன்விளை முத்தாரம்மன் டிராவல்ஸ் விழாவில் ஏஜென்சிகளுக்குக் கௌரவம்

திசையன்விளை, மார்ச்.30

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் முன்னனிப் போக்குவரத்து நிறுவனமான முத்தாரம்மன் டிராவல்ஸ் நிறுவனத்தின் 3ம் ஆண்டு நிறைவு விழாவும், 4ம் ஆண்டு துவக்க விழாவும் நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

நிறுவனத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய ஏஜென்சிதாரர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த ஆண்டு அதிக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்த சென்னை ரெட்ஹில்ஸ் எஸ்.எம்.எஸ் (SMS) டிராவல்ஸ் உரிமையாளர் ஜனார்த்தனன்க்கு 12 கிராம் தங்கக் காசு முதல் பரிசும், 2ம் பரிசு திசையன்விளை தென்றல் டிராவல்ஸ் உரிமையாளர் ஆர். இளந்தென்றல் அவர்களுக்கு 10 கிராம் தங்கக் காசும் வழங்கப்பட்டது. மேலும், பல்வேறு ஏஜென்சிதாரர்களுக்கு 8 கிராம் மற்றும் 6 கிராம் தங்கக் காசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தோம்பல்:

விழாவில் கலந்துகொண்ட அனைத்து ஏஜென்சிதாரர்களுக்கும் சிறப்புப் பரிசுகள் மற்றும் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன. முத்தாரம்மன் டிராவல்ஸ் நிறுவனர் ஏ.எஸ். பட்டு ராஜா பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியை எல்.ஐ.சி (லிமிசி) தலைமை ஏஜென்சிதாரர் முருகப்பெருமாள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். விழாவின் இறுதியில் அனைவருக்கும் அறுசுவை விருந்து உபசரிப்பு நடைபெற்றது.



# "தேர்தல் களம் தயார்.. அலுவலர்களுக்குப் பயிற்சி!" மதுரை மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஆட்சியர்கள் அதிரடி ஆய்வு

மதுரைமார்ச்.,30-

தென்காசி 26 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தலை முன்னிட்டு, மதுரை மற்றும் தென்காசி மாவட்டங்களில் உள்ள அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன.

*மதுரை மாவட்ட நிலவரம்:* மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளிலும் மொத்தம் 14,780 அலுவலர்கள் (PO, PO1, PO2, PO3) பயிற்சியில் பங்கேற்றனர். மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார், திருமங்கலம் பி.கே.என் பள்ளி மற்றும் உசிலம்பட்டி டி.இ.எல்.சி பள்ளிகளில் நடைபெற்ற பயிற்சியை நேரில் ஆய்வு செய்தார். மேலூர் (மில்டன் பள்ளி), மதுரை கிழக்கு (யாதவா கல்லூரி), சோழவந்தான் (வடிப்பட்டி தாய் கல்லூரி) உள்ளிட்ட 10 இடங்களில் ணிகூஷிவி மற்றும் கூஷிகூஷிறிகிஜி கருவிகளின் பயன்பாடு குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

* தென்காசி மாவட்ட நிலவரம்:* தென்காசி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளிலும் (சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம்) பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், "தேர்தல் நடத்தும் முழு பொறுப்பு நம்மிடம் உள்ளது, சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டு பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்" என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இப்பயிற்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர் வைஷ்ணவி பால் இ.ஆ.ப உட்படப் பல அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



# கோயிலில் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் மோதல்

## புகைப்பட கலைஞர்களை தாக்கிய 7 பேர் கைது

பெங்களூரு, மார்ச்.,30-

கர்நாடகாவில் கோயிலில் புகைப்படக் கலைஞர்கள் காலணி அணிந்து திருமணத்துக்காகப் புகைப்படம் எடுத்ததால் 7 பேர் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் 7 பேரையும் கைது செய்தனர். கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் சக்லேஷ்பூரில் பெட்டத பைரேஸ்வரா கோயில் உள்ளது. அங்கு நேற்று புகைப்படக் கலைஞர்கள் நவி (27), நந்தன் (25) ஆகியோர் புதுமணத் தம்பதியினரைப் புகைப்படம் எடுப்பதற்காக வந்தனர். அப்போது நவியும், நந்தனும் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் பக்தர்கள் கோபமடைந்தனர். இருவரையும் கோயிலுக்கு வெளியே காலணிகளைக் கழற்றி விட்டு வருமாறு கூறியுள்ளனர். இதில் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் கோபமடைந்த உள்ளூர் இளைஞர்கள் 10க்கும் மேற்பட்டோர் நவி, நந்தனை கடுமையாக தாக்கினர். மேலும் அவர்களின் கேமராக்களைப் பறித்து கீழே போட்டு உடைத்தனர். இதனால் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. இதுகுறித்து தகவலறிந்த போலீஸார் காயமடைந்த புகைப்படக் கலைஞர்களை மீட்டு, மருத்துவமனையில் அனுமதித்தனர். இருவரும் அளித்த புகாரின் பேரில் 7 பேரை கைது செய்தனர்

# மதுரை மத்திய தொகுதியில் சுந்தர்.சி போட்டியால் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு 'டஃப்'

மதுரை, மார்ச்.,30-

மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் புதிய நீதிக்கட்சி சார்பில் திரைப்பட இயக்குநரும், நடிகருமான சுந்தர்.சி இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். அதிமுக போட்டியிடவில்லை என்று வருத்தத்தில் இருந்த அக்கட்சியினருக்கு சுந்தர் சிபோட்டியிடுவது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மத்திய தொகுதியில் 2016. 2021 தேர்தல்களில் போட்டியிட்டு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெற்றி பெற்றுள்ளார். 2016ம் ஆண்டு அதிமுக வேட்பாளர் பேராசிரியர் ஜெயபாலிடம் வெறும் 5,762 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 2021ம் ஆண்டு அதிமுக போட்டியிடாமல் கூட்டணிக்கு ஒதுக்கப்பட்டதால், பழனிவேல் தியாகராஜன் எளிதாக வெற்றி பெற்றார். இந்த முறை என்டிஏ கூட்டணியில் இந்த தொகுதி எதிர்பாராதவிதமாக ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக்கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அதனால், மீண்டும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கே இந்த தொகுதி சாதகமாக மாறியதாக கூறப்பட்டது. இந்நிலையில், புதிய நீதிக்கட்சியில் மதுரை மத்திய தொகுதியில் திடீரென சுந்தர்.சி வேட்பாளராக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தொகுதி விஐபி அந்தஸ்தை பெற்றுள்ளது.



அதிமுக வேட்பாளர்கள் 17 பேர் அறிவிப்பு: 3ம் கட்ட பட்டியல் வெ அவர் தங்கள் கட்சி சின்னத்தில் போட்டியிடுவதால் அதிமுகவினரும் சுணக்கமின்றி வேலை செய்வர் என்பதால், இத்தொகுதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அதிமுகவினர் கூறுகையில், சினிமா பிரபலமான சுந்தர்.சி நடிகை குஷ்புவின் கணவர் என்பதால், இருவரின் பிரச்சாரம் இயல்பாகவே வாக்காளர்களிடம் கவனம் பெறும் வெற்றிக்காக சுந்தர்சியும் தேர்தல் பணிகளில் தாராளம் காட்டுவார் என்பதால், கட்சியினரும் மத்திய தொகுதியில் முஸ்லிம்கள் அதிகம் நடிகை குஷ்பு அச்சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது பிரச்சாரம் எடுபட வாய்ப்புள்ளது. சுந்தர்.சிக்காக அவரது ஆதரவு நடிகர், நடிகைகள் மற்றும் அதிமுக ஆதரவு நடிகர் பட்டாளம் களமிறங்கும். அதனால், தேர்தல் முடியும் வரை, மதுரை மத்திய தொகுதி மாநில அளவில் கவனம் பெறும்' என்றனர்.

வேட்பாளரானது எப்படி ?: ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சுந்தர்.சி, 37க்கும் அதிகமான படங்களை இயக்கி உள்ளார். 15க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவரது படங்களில் பெரும்பாலும் காமெடி குடும்பப்பாங்கான ஜனரஞ்சகமான கதைகளுக்கு தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். முறைமாமன் படத்தை இயக்கியபோது, அதில் நடித்த குஷ்புவை காதலித்து திருமணம் செய்தார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். குஷ்பு தற்போது பாஜகவில் இருக்கிறார். சுந்தர்.சி எந்த கட்சியிலும் இல்லை ஆனால் ஏ.சி.சண்முகத்துடன் இணைந்து படங்களை தயாரித்து வந்த நிலையில் அவருக்காக சுந்தர்.சியும், குஷ்புவும் பிரச்சாரம் செய்திருந்தனர். மதுரையில் கடந்த பிப்.22ம் தேதி குடியரசு துணைத் தலைவர் சி.பி ராதா கிருஷ்ணன் தலைமையில் நடந்த வ.உ.சி. சிலை அடிக்கல் நாட்டு விழாவில் சுந்தர்.சி கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

# மே.வங்க தேர்தலில் மம்தாவுக்கு இணையாக முக்கியத்துவம் பெறும் மருமகன் அபிஷேக்

புதுடெல்லி, மார்ச்,30-

மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (டிஎம்சி) இளைஞர் பிரிவு தலைவராக இருப்பவர் அபிஷேக் பானர்ஜி. மக்களவை எம்.பி.யான இவரை முதல்வர் மம்தா தனது வாரிசாக முன்னிறுத்தி வருகிறார். இதனால் கட்சியில் மம்தாவுக்கு அடுத்த நிலை தலைவராக அபிஷேக் முன்னிறுத்தப்படுகிறார். இந்நிலையில் 2026 தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மம்தாவுக்கு இணையான தலைவராக அபிஷேக் உருவெடுத்துள்ளார். இருவரின் ஒருங்கிணைந்த தலைமை, மேற்கு வங்க அரசியலில் ஒரு தனித்துவமான அரசியல் நிலையை உருவாக்கியுள்ளது. முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக அபிஷேக் மாறி வருகிறார். இது, மாநில தேர்தல் அரசியலில் மம்தாவின் மருமகன் அபிஷேக்கின் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. சுமார் 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்த இடதுசாரி கட்சிகளுக்கு



பின் டிஎம்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது டிஎம்சியில் உறுப்பினரான அபிஷேக், கடந்த 2021 சட்டப்பேரவை மற்றும் மக்களவை தேர்தல்களின் போதும் தீவிரப் பங்கு வகித்திருந்தார். இருப்பினும், தற்போதைய பிரச்சாரத்தில் மம்தா அபிஷேக் இடையே காணப்படும் ஒருங்கிணைப்பின் அளவு இதுவரை இல்லாத வகையில் உள்ளது. கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் கொல்கத்தாவின் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யானார் அபிஷேக். அப்போது முதல் அதே தொகுதியில் எம்.பி.யாக வென்று வருகிறார். இம்மாநிலத்தில் பாஜக முக்கிய எதிர்க்கட்சியாக படிப்படியாக உருவெடுத்துள்ளது. இந்த தேர்தலில் பாஜக தனது அரசியல் ஆக்ரோஷத்தை கடுமையாக வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகை அரசியல் கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்கு வங்கத்தில் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. எனவே, தற்போதைய சட்டப்பேரவை தேர்தல், டிஎம்சி மற்றும் பாஜக இடையே கடுமையானப் போட்டியை ஏற்படுத்தி உள்ளது

# அமெரிக்க ராணுவத்தை அனுமதிக்க கூடாது

## வளைகுடா நாடுகளுக்கு ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் அறிவுறுத்தல்

டெஹ்ரான், மார்ச்.,30-

பாதுகாப்பு, அமைதி மற்றும் வளர்ச்சியை விரும்பினால், அமெரிக்க ராணுவம் தங்கள் நாட்டில் இருந்து செயல்பட வளைகுடா நாடுகள் அனுமதிக்க கூடாது என ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் கூறியுள்ளார். ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த மாதம் 28ம் தேதி போர் தொடுத்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் மையங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இங்கிருந்து அமெரிக்க போர் விமானங்கள் புறப்பட்டு சென்று ஈரான் மீது தாக்குதல் நடத்துகின்றன.

துபாயில் தாக்குதல்: ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவத்துக்கு உதவியாக, ட்ரோன் எதிர்ப்பு ஆயுதங்களை உக்ரைன் வழங்கியுள்ளது. இந்த ஆயுதங்கள் துபாயில் உள்ள ஒரு கிடங்கில் வைக்கப்பட்டிருந்தன. அந்த இடத்தை தாக்குதல் நடத்தி அழித்துள்ளதாக ஈரான் ராணுவ தலைமையகம் கதம் அல்அன்பியா கூறியுள்ளது. மேலும், துபாயில் பதுங்கியுள்ள அமெரிக்க ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் வெளியிட்டுள்ள செய்தியில், ''பாதுகாப்பு, அமைதி மற்றும் வளர்ச்சியை விரும்பினால், அமெரிக்க ராணுவம் தங்கள் நாட்டில் இருந்து செயல்பட வளைகுடா நாடுகள் அனுமதிக்க கூடாது. நாங்கள் எப்போதும் முதலில் தாக்குதல் நடத்துவதில்லை. ஆனால், எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், பதிலடி கொடுப்போம்'' என தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு நம்பிக்கை தேவை: ஈரான் அமெரிக்கா இடையே சமரசப் பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக சவுதி அரேபியா, எகிப்து, மற்றும் துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர்களும் பாகிஸ்தானில் இன்றும் நாளையும் ஆலோசனை நடத்துகின்றனர். இதை வரவேற்றுள்ள ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான், பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஷ் ஷெரீப்பிடம் பேசுகையில், "போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்கா வுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நம்பிக்கை தேவை" என கூறியுள்ளார்

# கோவையில் 'சீட்' கிடைக்காமல் அதிமுக பிரமுகர்கள் ஏமாற்றம் தேர்தல் முடிவுகளில் எதிரொலிக்குமா?

கோவை, மார்ச்.,30-

அதிமுக சார்பில், கோவையிலுள்ள சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிட பழையவர்களுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர், மாவட்ட செயலாளர் உள்ளிட்டோருக்கு சீட் மறுக்கப்பட்டுள்ளது பேசு பொருளாகி உள்ளது. அதிமுகவில் 'சீட்' மறுக்கப்பட்டோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர் முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுச்சாமி. 2001 06 காலத்தில் அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். 2011 சட்டசபைத் தேர்தலில் சூலூர் தொகுதியில் அதிமுக வேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்ட நிலையில், கூட்டணியில் இணைந்த தேமுதிகவுக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டதால் போட்டியிடும் வாய்ப்பை இழந்தார். இதனைத் தொடர்ந்து 2011ல் கோவை மேயர் பதவியையும், மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் பதவியையும் இவருக்கு ஜெயலலிதா வழங்கினார். பின்னர், 2014ல் சில காரணங்களால் மேயர் பதவி, கட்சிப் பதவி




பறிக்கப்பட்டு கட்சியில் ஓரம்கட்டப்பட்டார். ஜெயலலிதா மறைவிற்கு பின், 2019ல் நடந்த சூலூர் இடைத்தேர்தலில் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த்த செ.ம.வேலுசாமிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தொடர்ந்து 2021 சட்டப் பேரவைத் தேர்தலிலும் இவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் விரக்தியில் இருந்தவருக்கு, கட்சியின் அமைப்பு செயலாளர் பதவி வழங்கி பொதுச்செயலாளர் பழனிசாமி நம்பிக்கை ஊட்டினார். இதனால் மீண்டும் சட்டப்பேரவைத் தேர்தலில் வாய்ப்பு கிடைக்கும் என செ.ம.வேலுசாமி எதிர்பார்த் திருந்தார். இம்முறை சூலூர் அல்லது பல்லடம் தொகுதி தனக்கு நிச்சயம் ஒதுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த நிலையில், எஸ்.பி.வேலுமணியின் ஆசி இல்லாததால் வேட்பாளர் பட்டியலில் இவரது பெயர் இடம்பெறவில்லை. இதனால் செ.ம.வேலுசாமியின் ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். அதேபோல், மேட்டுப்பாளையம் தொகுதி சிட்டிங் எம்எல்ஏவான ஏ.கே.செல்வராஜ். ஜெயலலிதா ஆட்சியில் அமைச்சராகவும், ராஜ்ய சபா எம்பியாகவும் இருந்தவர். ஈரோட்டில் செங்கோட்டையன் விலகியபோது, அவர் வகித்த ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட பொறுப்பாளராக ஏ.கே.செல்வராஜ் நியமிக்கப்பட்டார். மேட்டுப்பாளையம் அல்லது ஈரோடு மாவட்டத்தில் ஒரு தொகுதியை எதிர்பார்த்து இருந்த இவருக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு நெருக்கமான அதிமுக எம்.ஜி.ஆர். இளைஞரணி மாநில இணைச் செயலாளர் வடவள்ளி சந்திர சேகர், சில மாதங்கள் மனக்கசப்பின் காரணமாக கட்சியில் இருந்து விலகியிருந்தார். அதன் பின் மீண்டும் கட்சியில் இணைந்த அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்ற எதிர்ப்பார்ப்பு பொய்த்து போயுள்ளது. கோவையில் ஏதாவது ஒரு தொகுதியை எதிர்பார்த்த மாநகராட்சி எதிர்கட்சித் தலைவர் பேரவை பிரபாகரனுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது. சிட்டிங் எம்எல்ஏவும், மாஜி அமைச்சருமான செ.தாமோதரனுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதால் கிணத்துக் கடவில் 'சீட்' எதிர்பார்த்திருந்த மாஜி எம்எல்ஏ எட்டிமடை சண்முகம் உள்ளிட்டோரும் ஏமாற்றமடைந்துள்ளனர். மடத்துக்குளம் தொகுதி கூட்டணிக்கு ஒதுக்கப்பட்டதால், அங்குள்ள சிட்டிங் அதிமுக எம்எல்ஏ மகேந்திரனுக்கு 'சீட்' ஒதுக்கப்படவில்லை. தொகுதியை எதிர்பார்த்திருந்த நீலகிரி மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்துக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு, முன்னாள் எம்எல்ஏ சாந்திராமுவுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அதிமுக நிர்வாகிகள் கூறும்போது, "மறைந்த முதல்வர் ஜெயலலிதா இருந்திருந்தால் ஒவ்வொரு தேர்தலிலும் அதிக தொகுதிகளில் புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கும். ஆனால், தற்போது சிட்டிங் எம்எல்ஏ உள்ளிட்ட சிலருக்கு மட்டுமே தொடர்ச்சியாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது கட்சி நிர்வாகிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தாலும், தேர்தல் நெருங்கும் போது கசப்புகளை மறந்து தேர்தல் பணியில் தீவிரமாகி விடுவோம் என்றனர்.



# 3வது முறை “உடுமலை கோட்டையில் மீண்டும் ராதாகிருஷ்ணன்!”

## அதிமுக தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டம்

உடுமலை மார்ச் 30- திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதியின் அதிமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் உடுமலை கே. ராதாகிருஷ்ணன், 3 வது முறையாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, உடுமலை அடுத்த கோலார்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். *வாழ்த்து மழையில் வேட்பாளர்:* டிபிள்எக்ஸ் பிரதர்ஸ் குழுவைச் சேர்ந்த சக்தி, கௌதம், சபரி, அகில், ரங்கா மற்றும் கழகத்தின் பல்வேறு சார்பணிப் பொறுப்பாளர்கள் ராதாகிருஷ்ணன் அவர்களை நேரில் சந்தித்துச் சால்வை அணிவித்துத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். *தேர்தல் வாக்குறுதி:* அப்போது பேசிய நிர்வாகிகள், "அம்மா அரசின் சாதனைகளை ஏழை எளிய மக்களிடம் கொண்டு சேர்த்தவர் ராதாகிருஷ்ணன் அவர்கள். இம்முறை எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்தவுடன், முடக்கப்பட்ட அம்மா வீடு கட்டும் திட்டம், தாலிக்குத் தங்கம், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட அனைத்தும் மக்கள் இல்லம் தேடி வரும்" எனத் தெரிவித்தனர். 2016 மற்றும் 2021 தேர்தல்களில் வெற்றி பெற்ற ராதாகிருஷ்ணன், தற்போது 'ஹாட்ரிக்' வெற்றியை நோக்கி உடுமலைத் தொகுதியில் களம் காண்கிறார்.

# குருத்தோலை ஞாயிறு கொண்டாட்டம் பவனியாகச் சென்ற கிறிஸ்தவர்கள்



சென்னை, மார்ச்.,30-
குருத்தோலை ஞாயிற்றுக்கிழமையையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் குருத்தோலை பவனியும் சிறப்பு ஆராதனையும் நடைபெற்றன. யேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதற்கு முன்பாக ஜெருசலேம் நகரின் வீதிகளின் வழியாக கோவேறு கழுதை மீது அமர்த்தப்பட்டு பவனியாக அழைத்துச் செல்லப்பட்டதை நினைவுகூறும் வகையில் உலகம் முழுவதும் புனித வாரத்தின் தொடக்க தினமான ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறாக கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் புனித வாரத்தின் தொடக்க தினமான இன்று (ஞாயிறு) குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்பட்டது. இதையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் காலை குருத்தோலை பவனியும், அதைத்தொடர்ந்து சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றன. பவனியில் பங்கேற்ற இறைமக்கள் கைகளில் குருத்தோலையை உயர்த்தி பிடித்தவாறு "ஓசானா தாவீதின் புதல்வா" என்ற பாடலைப் பாடியபடி ஆலயத்தை ஒட்டியுள்ள வீதிகளில் பவனியாகச் சென்றனர். தேசிய திருத்தலமான சாந்தோம் பேராலயத்தில் அதிபர் வின்சென்ட் சின்னதுரை தலைமையில் புனித ரபேல் மேல்நிலைப்பள்ளி அருகே இருந்து ஆலயம் நோக்கி நடைபெற்ற குருத்தோலை பவனியிலும் தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு திருப்பலியிலும் ஏராளமான கிறிஸ்தவர்கள் குருத்தோலையுடன் கலந்துகொண்டனர். இதேபோல், சென்னை மயிலாப்பூர் லஸ் சர்ச், ராயப்பேட்டை காணிக்கை அன்னை ஆலயம், பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி ஆலயம், எழும்பூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலம், புதுப்பேட்டை அந்தோணியார் ஆலயம், பாரிமுனை தூய மரியன்னை பேராலயம் உள்ளிட்ட கத்தோலிக்க தேவாலயங்களிலும் சிஎஸ்ஐ திருமண்டல தலைமை ஆலயமான கதீட்ரல் பேராலயம், வேப்பேரி புனித அந்திரேயா ஆலயம், மயிலாப்பூர் நல்மேய்ப்பர் ஆலயம், ராயப்பேட்டை வெஸ்லி ஆலயம், எழும்பூர் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் உள்ளிட்ட சிஎஸ்ஐ ஆலயங்களிலும் குருத்தோலை பவனியும், சிறப்பு ஆராதனையும் நடைபெற்றன. சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் குருத்து ஞாயிறு கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை அமலஉற்பஅன்னை ஆலயம், தாம்பரம் பாத்திமா அன்னை ஆலயம், சேலையூர் புனித மாற்கு ஆலயம், பெருங்களத்தூர் குழந்தை யேசு ஆலயம், ஊரப்பாக்கம் ஆரோக்கிய அன்னை ஆலயம், கூடுவாஞ்சேரி நல்மேய்ப்பர் ஆலயம், ரயில்நகர் புனித அந்தோணியார் ஆலயம், பேரமனூர் எம்டிசி நகர் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களில் நடைபெற்ற குருத்தோலை பவனியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். மறைமலைநகர் தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அலெக்சிஸ் மனோகர் தலைமையில் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இருந்து குருத்தோலை பவனி தொடங்கி திருவள்ளுவர் சாலை, பாவேந்தர் சாலை வழியாக ஆலயத்தை சென்றடைந்தது. பின்னர் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. காட்டாங்குளத்தூர் லூர்து அன்னை ஆலயத்தில் அருட்தந்தை அருள்ராஜ், அருட்தந்தை மாணிக்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற குருத்தோலை பவனியிலும் தொடர்ந்து நடந்த சிறப்பு திருப்பலியிலும் ஏராளமானோர் பங்கேற்றனர்

# ட்ரம்ப் மோடி பேச்சில் எலான் மஸ்க் பங்கேற்கவில்லை: வெளியுறவுத் துறை விளக்கம்



புதுடெல்லி, மார்ச்.,30-
ஈரான் போர் நிலவரம் குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடி இடையே நடைபெற்ற தொலைபேசி பேச்சின் போது, அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் பங்கேற்றார் என்று வெளியான தகவலை மத்திய வெளியுறவுத் துறை மறுத்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியுடன் கடந்த 24ம் தேதி தொலைபேசியில் பேசினார். இருவரும் ஈராக் போர் நிலவரம் குறித்து பேசினர். இதுகுறித்து எக்ஸ் தளத்தில் கருத்து தெரிவித்த பிரதமர் மோடி, ‘‘மேற்காசிய நிலவரம் குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், என்னுடன் தொலைபேசியில் பேசினார். இப்பகுதியில் விரைவில் அமைதி ஏற்பட வேண்டும், ஹார்முஸ் ஜலசந்தி திறந்து விடப்பட வேண்டும் என இந்தியா விரும்புவதாக தெரிவித்தேன். இப்பகுதியில் அமைதி மற்றும் நிலைத்தன்மை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டோம்’’ என கருத்து தெரிவித்திருந்தார். இதுகுறித்து நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட தகவலில், ‘‘ஈரான் போர் நிலவரம் குறித்து அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடி இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் போது, தொழிலதிபர் எலான் மஸ்க்கும் பங்கேற்றார். போர் நிலவரம் குறித்து இருநாட்டு தலைவர்கள் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில், தனியார் நபர் பங்கேற்பது வழக்கத்துக்கு மாறானது’’ என்று தெரிவித்திருந்தது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் நேற்று கூறுகையில், ‘‘இந்தக் கதையை நாங்கள் பார்த்தோம். கடந்த 24ம் தேதி பிரதமர் மோடி மற்றும் அதிபர் ட்ரம்ப் இருவர் மட்டும்தான் தெலைலைபேசியில் பேசினர். அப்போது வேறு யாரும் இடம்பெறவில்லை’’ என்றார்.

# நொய்டா சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி




புதுடெல்லி, மார்ச்.,30-
நொய்டா சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்த பிரதமர் மோடி, இது 2 நிமிடத்துக்கு ஒரு விமானம் புறப்படும் திறன் வாய்ந்தது என பெருமிதமாக தெரிவித்தார். உத்தரப் பிரதேச மாநிலம் ஜேவாரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முதல் பகுதியை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது: புதிதாக திறக்கப்பட்டுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையம், வட இந்தியா முழுவதையும் உலக நாடுகளுடன் இணைக்கும் முக்கிய மையமாக அமையும். இங்கிருந்து ஒவ்வொரு 2 நிமிடத்துக்கும் ஒரு விமானம் இயக்கப்படும் வகையில் இந்த விமான நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முந்தைய சமாஜ்வாதி கட்சி ஆட்சியில் நொய்டா, சுயலாபத்துக்காக ஒரு ‘ஏடிஎம்' இயந்திரமாக பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது பாஜக ஆட்சியில் நொய்டா, மாநிலத்தின் வளர்ச்சி இன்ஜினாக மாறியுள்ளது. செமிகண்டக்டர் தொழிற்சாலை, மீரட் மெட்ரோ மற்றும் நமோ பாரத் ரயில்கள் என உத்தர பிரதேசம் நவீன வசதிகளுடன் முன்னேறி வருவது ‘இரட்டை இன்ஜின்' அரசின் முயற்சிக்குச் சான்றாகும். விவசாயிகள், சிறு, குறு தொழில்கள், மேற்கு உத்தர பிரதேசத்தின் இளைஞர்களுக்கு இந்த விமான நிலையம் ஏராளமான புதிய வாய்ப்புகளை வழங்கும். அமெரிக்கா ஈரான் இடையிலான போர் சூழல் நிலவும் நிலையிலும், இந்தியா தனது வளர்ச்சிப் பாதையில் தொய்வின்றி முன்னேறி வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த விழாவில் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

# மேலும் 2 எல்பிஜி கப்பல்கள் இந்தியா வர ஈரான் அனுமதி

டெஹ்ரான், மார்ச்.,30-
மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது.



ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜல சந்தியை ஈரான் மூடியது. கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 5ல் ஒரு பங்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகத்தான் நடைபெறுகிறது. இதை ஈரான் மூடியதால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. ஹார்முஸ் ஜலசந்தியை திறந்து வட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால் இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், இராக் ஆகிய 5 நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்று முன்தினம் அறிவித்தார். ஈரான் போர் தொடங்கியதில் இருந்து, இதுவரை 4 எரிபொருள் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா வந்துள்ளன. இந்நிலையில் மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் அனுமதித்துள்ளது. இந்த கப்பல்களில் 90,000 டன்களுக்கு அதிகமாக சமையல் காஸ் கொண்டு வரப்படுகிறது. இந்த 2 கப்பல்களும் வளைகுடாவை கடந்து இந்தியா வந்து கொண்டிருக்கின்றன. மேலும் 5 எரிபொருள் கப்பலகள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஐக்கிய அரபு அமீரகம் அருகே காத்துக் கிடக்கின்றன



# மாவோயிஸ்ட் ஆதிக்கம் நிறைந்த சத்தீஸ்கர் கிராமத்துக்கு வருகை தந்த முதல் ஆட்சியர்

ராய்ப்பூர், மார்ச்.,30-
சத்தீஸ்கரின் நாராயண்பூர் மாவட்டத்தின் தொலைதூர ‘ரேகாவயா' கிராமம் ஒரு காலத்தில் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கம் நிறைந்திருந்ததாக இருந்தது. இந்த கிராமம் தற்போது பொது நீரோட்டத்தில் இணைந்து வருகிறது. இந்நிலையில் இந்த கிராமத்துக்கு நாராயண்பூர் மாவட்ட ஆட்சியர் நம்ரதா ஜெயின் நேற்று வருகை தந்தார். இதன்மூலம் அந்த கிராமத்துக்கு வருகை தந்த முதல் மாவட்ட ஆட்சியர் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்தார். அவருக்கு பழங்குடியின மக்கள் தங்கள் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பின்பற்றி மஹுவா மலர் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். கோண்டி மொழியில் பாடல்கள் பாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதையடுத்து அப்பகுதியில் புதிய பள்ளிக் கட்டிடத்தை ஆட்சியர் திறந்து வைத்தார். குழந்தைகளுடன் அமர்ந்து அவர்களின் கல்வி மற்றும் எதிர்கால லட்சியங்கள் குறித்து கேட்டறிந்தார். குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள், புத்தகங்களை வழங்கினார். இதையடுத்து சாலை வசதி, செல்போன் தொடர்பு, ரேஷன் விநியோகம் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆட்சியரிடம் கிராம மக்கள் முன்வைத்தனர்.

# கரூரில் இருந்து தொகுதி மாறி கோவையில் செந்தில் பாலாஜி களம் காண்பது ஏன்?



கோவை, மார்ச்.,30-
நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில், கோவை தெற்குத் தொகுதியில் திமுக வேட்பாளராக செந்தில் பாலாஜி போட்டியிடுகிறார். சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பட்டியல் நேற்று அறிவிக்கப்பட்டது. இதில், கோவை தெற்குத் தொகுதியில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர், கடந்த முறை கரூரில் போட்டியிட்டார். தங்களுக்கு சாதகமாக இல்லாத கொங்கு மண்டலத்தில் இம்முறை கணிசமான தொகுதிகளை கைப்பற்றி விட வேண்டும் என நினைத்த திமுக தலைமை. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கோவை மண்டல பொறுப்பாளராக நியமித்து தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தியது. அதற்கேற்ப அவரும் கோவை உள்ளிட்ட கொங்கு மண்டல மாவட்டங்களில் முகாமிட்டு தேர்தல் பணியை தீவிரப்படுத்தி வந்தார். அதேபோல், அதிமுகவையும், எஸ்.பி.வேலுமணியின் ஆதிக்கத்தையும் எதிர்கொள்ள ஏதுவாக, கோவையில் திமுக போட்டியிடும் தொகுதிகளில், வலுவான வேட்பாளர்களை களமிறக்க வேண்டும் என திமுகவினரும் தலைமைக்கு வலியுறுத்தி வந்தனர். சென்னையில் முதல்வர் நடத்திய நேர்காணலில் பங்கேற்ற போதும், திமுகவினர் இதை அழுத்தமாக பதிவு செய்தனர். மேலும், உளவுத் துறையினரின் அறிக்கையும், கோவையில் திமுகவின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் வலுவான வேட்பாளர்களாக இருக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தது. கடந்த 6 மாதங்களுக்கு முன்னர், கோவையில் செந்தில் பாலாஜி போட்டியிடுவார் என தகவல் பரவியது. அதை அப்போது செந்தில் பாலாஜி மறுத்து மீண்டும் கரூரில் தான் போட்டி என பேட்டியளித்தார். இந்நிலையில், கடந்த சில நாட்களாக கோவை தெற்கு தொகுதியில் செந்தில் பாலாஜி போட்டியிடுகிறார் என்ற தகவல் கட்சியினரிடையே பரவி வந்தது. இதை செந்தில் பாலாஜியும் மறுக்கவில்லை. இதற்கிடையே, கோவை தெற்கு தொகுதிக்கு உட்பட்ட திமுக நிர்வாகிகளுக்கு தனது செல்போன் எண்ணை அனுப்பி, எதுவாக இருந்தாலும் தொடர்பு கொள்ள அவர் அறிவுறுத்தியது கோவையில் அவர் போட்டியிடுவதை மேலும் உறுதிப்படுத்தியது. ஏனெனில், அதிமுக வலுவான வாக்கு வங்கி கொண்ட மாவட்டங்களில் கோவை முக்கியமானது. எனவே, கோவையில் எஸ்.பி.வேலுமணியையும், அதிமுகவையும் சமாளிக்கும் வகையிலும், சுணக்கமின்றி பிரச்சார களத்தில் திமுக முன்னிலையில் இருக்க வேண்டும் என்றால், செந்தில் பாலாஜி தான் சரியானவர் என கருதிய திமுக தலைமை, அவரை கோவை தெற்குத் தொகுதியில் போட்டியிட அறிவுறுத்தியது. செந்தில் பாலாஜி இங்கு போட்டியிட்டால், அவர் போட்டியிடும் தொகுதிகள் மட்டுமின்றி, கோவையில் உள்ள மற்ற தொகுதிகளின் பிரச்சாரங்களும் அவரது நேரடிக் கண்காணிப்பில் இருக்கும். வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் என்பதோடு, தேர்தல் பணிகளையும் சுணக்கமில்லாமல் அவர் பார்த்துக் கொள்வார் எனவும் திமுக தலைமை கருதியது. இதை எல்லாம் கணக்கிட்டு, செந்தில் பாலாஜியை கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுமாறு முதல்வர் ஸ்டாலினே, அறிவுறுத்தியதால் அவர் ஒப்புக் கொண்டார் எனவும், இனி கோவையில் திமுகவினரின் பிரச்சாரம் களைகட்டும் எனவும் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். அதே சமயம், செந்தில் பாலாஜியின் கோவை வருகை இருவேறு விமர்சனங்களை கிளப்பும் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள். அதாவது, கடந்த முறை கரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற செந்தில் பாலாஜி, தோல்வி பயத்தில் கோவை தெற்கு தொகுதிக்கு இடம் பெயர்ந்துவிட்டார் என கரூரில் எதிர்கட்சியினரும். கோவை தெற்கில் வெளியூர் வேட்பாளரை திமுக களமிறக்கியுள்ளது. தேர்தல் முடிந்த பின்னர் அவர் வெளியூருக்கே சென்று விடுவார் என கோவையில் எதிர்கட்சியினரும் பிரச்சாரத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது என அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## "37 ஆண்டுகால மக்கள் பணி.. மீண்டும் ஒரு தேர்தல் களம்!"

# திமுக வேட்பாளர் அறிவிப்பால் ஆத்தூர் தொகுதி முழுவதும் இனிப்பு மழை



சின்னாளபட்டி மார்ச் 30- திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 9 வது முறையாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திமுக சார்பில் போட்டி யிடுவார் எனத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததைத் தொடர்ந்து, தொகுதி முழுவதும் திமுகவினர் உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா தலைமையில் திமுகவினர் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். "திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் வாழ்க", "தென்பாண்டி சிங்கம் ஐயா ஐ.பி. வாழ்க" என விண்ணதிரும் கோஷங்களை எழுப்பினர். அவ்வழியே சென்ற பொதுமக்கள், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டிகளுக்கு திமுகவினர் மகிழ்ச்சியுடன் இனிப்புகளை வழங்கினர். 37 ஆண்டுகளாக ஒரே தொகுதியில் போட்டியிட்டு வரும் அமைச்சரின் மீது தொகுதி மக்கள் கொண்டுள்ள மாறாத பாசத்தை இது உணர்த்துவதாக அமைந்தது. நிகழ்ச்சியில் 15வது வார்டு திமுக வார்டு உறுப்பினர் பூஞ்சோலை ராஜு, ஒன்றிய பிரதிநிதி வடக்கு தெரு சந்திரன், 3வது வார்டு அவைத்தலைவர் தங்கமாயன், பிரதிநிதி வீரபாண்டி, வார்டு செயலாளர் மகுடீஸ்வரன், பொருளாளர் அருணகிரி, இளைஞரணி அமைப்பாளர்கள் வினோத், கார்த்திக், மாணவரணி அமைப்பாளர் கோகுல், முன்னாள் வார்டு செயலாளர் சோலை முருகன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். 9வது முறையாக தொடர்ந்து ஆத்தூர் தொகுதி மக்களின்மீது நம்பிக்கை வைத்தும், தொகுதி மக்களின் பாசத்துடன் ஒரே தொகுதியில் 37 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மாபெரும் வெற்றி பெறுவார் என தொகுதி மக்கள் கூறுகின்றனர்.

# "அசைக்க முடியாத ஆத்தூர் நாயகன்!" 9 முறை ஒரே தொகுதி அரசியல் சாதனை

## தொகுதி மக்கள் வரவேற்பு

சின்னாளபட்டிமார்ச்30- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் 9வது முறையாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி (71) போட்டியிடுகிறார் என்ற அதிகாரப்பூர்வ அறிவிப்பு, தொகுதி மக்களைப் பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. 1986ல் வத்தலக்குண்டு ஒன்றிய பெருந்தலைவராகத் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கிய ஐ.பி., 1989 முதல் தொடர்ந்து 8 முறை ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டுள்ளார். திமுக மாநில துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்த இவர், தற்போது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

*சாதனை வெற்றி:* கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாமக வேட்பாளரை விட 1,35,571 வாக்குகள் கூடுதலாகப் பெற்று, தமிழகத் தேர்தல் வரலாற்றிலேயே மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

* முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட வதந்திகள்:* அமைச்சர் ஐ.பெரியசாமி இம்முறை திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடுவார் என சமூக வலைதளங்களில் பரவி வந்த பொய்யான செய்திகளால் கவலையில் இருந்த ஆத்தூர் தொகுதி மக்களுக்கு, இந்த அறிவிப்பு மிகப்பெரிய நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தந்துள்ளதாகத் தொகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். "தென்பாண்டி சிங்கம்", "ஆத்தூர் காவலர்" எனப் புகழப்படும் இவர், இம்முறையும் இமாலய வெற்றி பெறுவார் எனத் தொண்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# "உண்மையைத் தேடும் பேனாக்களுக்கு ஒரு கவசம்!"* *புதிய பொறுப்பு!" அடையாள அட்டைகளை வழங்கிச் சிறப்பித்த தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்கம்





திருப்பூர் மார்ச் 30 - திருப்பூர் அவிநாசி ரோடு சாலையில் உள்ள டூடி ரெஸ்டாரண்டில், தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்கத்தின் சார்பில் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

*தலைமை மற்றும் முன்னிலை: * இந்த விழாவிற்கு மாநிலத் தலைவர் எஸ். இளங்கோ தலைமை தாங்கி, சங்கத்தின் நிர்வாகிகளுக்குப் புதிய அடையாள அட்டைகளை வழங்கிச் சிறப்பித்தார்.

*நிர்வாகிகள் பங்கேற்பு:* இந்நிகழ்வில் மாநிலத் துணைத்தலைவர் பால்பாண்டியன், திருப்பூர் மாவட்டத் தலைவர் ரஜினிகாந்த், மாவட்டச் செயலாளர் மகேந்திரன், மாவட்ட இணைச் செயலாளர் மோகன்ராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் பால்பாண்டி, மாவட்டப் பொருளாளர் மணிகண்டன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் மாநில மகளிர் அணித் தலைவி திருவேணி சந்திரன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், செய்தியாளர்களின் பாதுகாப்பு மற்றும் அடையாளத்தை உறுதி செய்யும் வகையில் இந்த ஐடி கார்டுகள் வழங்கப்பட்டது சங்க உறுப்பினர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# 43 வேட்பாளர்களை அறிவித்தது 'புதிய தமிழகம்' ஒட்டப்பிடாரத்தில் கிருஷ்ணசாமி போட்டி



சென்னை, மார்ச்.,30- ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் அவரது மகன் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர். புதிய தமிழகம் கட்சியின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ளார். இந்தப் பட்டியலில் 43 வேட்பாளர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதன்படி, ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர். மேலும், வாசுதேவ நல்லூரில் பால்ராஜ், கடைய நல்லூரில் கவி, நாங்குநேரியில் தமிழ்செல்வி, நிலக்கோட்டையில் பொ. சங்கர், பட்டுக்கோட்டையில் மா.குருமூர்த்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர். திருவெறும்பூரில் அ.பிச்சைமுத்து, ஆண்டிப்பட்டியில் மகா. இளையராஜா, முசிறியில் மு.சின்னையன், திருவாரூரில் மூ.தியாகராஜன், நன்னிலத்தில் மு.தமிழ்செல்வம், விராலிமலையில் அ.செல்வராஜ், சாத்தூரில் சு.வேல்முருகன் உள்ளிட்ட 43 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதிமுக கூட்டணியில் பேச்சுவார்த்தை நடத்திவந்த புதிய தமிழகம் கட்சி, தொகுதிகள் எண்ணிக்கை குறித்த இழுபறியால் தனித்துப் போட்டியிட முடிவு செய்து களமிறங்கியுள்ளது.




# "அவிநாசி மக்கள் தயார்.. தாமரை வெற்றி உறுதி!" தேர்தல் களத்தில் பாஜகவின் 'மாஸ்' என்ட்ரி

அவிநாசி மார்ச்30- 2026 தமிழகச் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அவிநாசி (தனி) தொகுதியில் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் தொகுதி முழுவதும் தீவிரச் சுவர் விளம்பரப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

*பொறுப்பாளர் பேட்டி:* இது குறித்துச் சுவர் விளம்பரப் பொறுப்பாளர் ராஜசேகரிடம் கேட்டபோது, "அவிநாசி தொகுதியில் இந்த முறை தாமரை மலர்வது 100% உறுதியாகிவிட்டது. தொகுதி மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அவர்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஆதரிக்கத் தயாராகிவிட்டதால், எங்களின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது" எனத் தன்னம்பிக்கையுடன் தெரிவித்தார்.

*கள நிலவரம்:* அவிநாசி தொகுதியில் பாஜகவின் இந்தத் தீவிரக் களப்பணிகள் மற்ற கட்சிகளிடையே பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன. தொகுதியின் மூலைமுடுக்கெல்லாம் தாமரைச் சின்னம் வரையப்பட்டு, தேர்தல் பிரச்சாரம் இப்போதே களைகட்டியுள்ளது.

# குவைத் துறைமுகம் மீது ஈரான் தாக்குதல் அமெரிக்க வீரர்கள் பலர் உயிரிழப்பு?

டெஹ்ரான், மார்ச்.,30- குவைத் நாட்டின் சுவைக் துறைமுகத்தில், அமெரிக்க கடற்படையின் 6 சிறியரக கப்பல்கள் மீது ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக 'ஆபரேசன் ட்ரூ பிராமிஸ்' என்ற பெயரில் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. குவைத் நாட்டின் சுவைக் துறைமுகம் மீது நேற்று கதிர் 389 ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. 1,000 கி.மீ தூரம் சென்று தாக்கும் இந்த ஏவுகணை, அமெரிக்க கடற்படையின் 6 சிறிய ரக கப்பல்களை தகர்த்ததாக கூறப்படுகிறது. இந்த கப்பல்கள் கடற்கரையில் வீரர்களை தரையிறக்கும் வசதி கொண்டவை. இவற்றில் 3 கப்பல்கள் மூழ்கி விட்டதாகவும், 3 கப்பல்கள் தீப்பற்றி எரிவதாகவும் ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இதை அமெரிக்கா இன்னும் உறுதி செய்யவில்லை. மேலும், குவைத்தில் அல் கார்ஜ் என்ற இடத்தில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், எரிபொருள் நிரப்பும் வாகனங்கள் பல சேதம் அடைந்ததாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. போர் விமானம் மீது.. ஈரான் நாட்டின் ஃபார்ஸ் மாகாணத்தில் நேற்று தாக்குதல் நடத்த வந்த அமெரிக்க விமானப்படையின் எப்16 போர் விமானத்தின் மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. அதேபோல், துபாயில் அமெரிக்க ராணுவத்தின் ட்ரோன் பிரிவினர் தங்கியிருந்த இடம், துபாய் ஓட்டல் ஒன்றின் மீதும் 'கமிக்காசி' என்ற ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இங்கு 500க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவத்தினர் தங்கியிருந்தனர். இதில் காயம் அடைந்த அமெரிக்க வீரர்கள் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் துபாய் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. குவைத் சர்வதேச விமான நிலையம் மீது ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் விமான நிலைய ரேடார் சேதம் அடைந்ததாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இதை குவைத் விமான போக்குவரத்து செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார். ஈரான் போர் காரணமாக வளைகுடா நாடுகளில் ஏற்கெனவே விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிறுவனங்கள் ஏராளமான பயணங்களை ரத்து செய்துள்ளன. இதனால் சர்வதேச விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது

# முஸ்லிம் மாணவரை தீவிரவாதி என திட்டிய பேராசிரியர் பணி இடைநீக்கம்



பெங்களூரு, மார்ச்.,30- பெங்களூரு கல்லூரியில் முஸ்லிம் மாணவரை பேராசிரியர் ஒருவர் தீவிரவாதி என திட்டிய விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதுதொடர்பான வீடியோ வெளியானதால், அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். பெங்களூருவில் உள்ள பி.இ.எஸ். கல்லூரியில் முஸ்லிம் மாணவர் ஒருவர் இளங்கலை 2ம் ஆண்டு படித்து வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை அவர் காலர் இல்லாத 'டி ஷர்ட்' அணிந்து வகுப்புக்கு வந்ததால் பேராசிரியர் முரளிதர் தேஷ்பாண்டே கோபமடைந்தார். அவரை 'தீவிரவாதி' என்று திட்டி, மத ரீதியான வெறுப்புக் கருத்துக்களை உதிர்த்தார். இந்த சம்பவத்தின் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து கல்லூரி நிர்வாகம் பேராசிரியர் முரளிதர் தேஷ்பாண்டேவை பணி இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது

## பேருந்தின் பின்புறம் கார் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழப்பு

சித்தூர், மார்ச்.,30-

பெங்களூரு திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில், சித்தூர் மாவட்டம், பங்காருபாளையம் அருகே சேஷாபுரத்தில் ஆந்திர அரசுப் பேருந்து ஒன்று பழுதடைந்தது. இதனால் அந்தப் பேருந்து சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பெங்களூருவில் இருந்து சித்தூர் நோக்கி வேகமாக வந்த ஒரு கார், இந்தப் பேருந்தின் பின்புறத்தில் மோதியது. இந்த கோர விபத்தில் காரில் பயணம் செய்த தெலங்கானா மாநிலம், வாரங்கலைச் சேர்ந்த தர் பாபு, லட்சுமி, அத்விகா ஆகிய மூவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இது தொடர்பாக பங்காரு பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்
















விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000